

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.9.2024) காஞ்சிபுரத்தில், பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைசெல்வி மோகன் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.9.2024) காஞ்சிபுரத்தில், பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தில், அங்கு வைக்கப்பட்டுள்ள பார்வையாளர் குறிப்பேட்டில் "மாநில உரிமைகளை பெற அண்ணா வழியில், கலைஞர் வழியில் அயராது உழைப்போம்! நன்றி, வணக்கம்!" என்று எழுதி கையொப்பமிட்டார். உடன் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைசெல்வி மோகன் உள்ளார்.

### திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணியை சிறப்பாக செய்திடுவீர்!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திருப்பூர், செப்.30-

திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதி யேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. திருப்பூர் வடக்கு மாவட்டத்திலுள்ள திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, அவிநாசி, பல்லடம் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது. அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக் கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும். புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும். தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனகேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6ம், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற Replacement id Card) படிவம் 6ம், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ. ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6 பி. விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterpertal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப் பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக்கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம்62 முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்6ன் கலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024

பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை

சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்கள்

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், திருப்பூர் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள், இந்நாள் ஊராட்சி ஒன்றிய குழுதலைவர்கள், துணைத் தலைவர்கள், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA-2). பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்டக்கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA-2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) இந்த பணியினை முழுமையாக இருந்து 2026 சட்டமன்ற தேர்தல் வரை தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப் பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### தேனி வடக்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

## கழகத்தினருக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன் எம்.பி. வேண்டுகோள்!

தேனி, செப். 30 -

தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்கதமிழ்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தலைமை கழகம் அறிவிப்பின்படி தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழக செயலாளர்நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலைய முகவர்கள் (BLA2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இப்பணியினை மேற்பார்வை செய்திட கீழ் கண்டவாறு ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்டு கின்றார்கள்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்

பி.டி.செல்லப்பாண்டியன் மாவட்ட அவைத்தலைவர்- சின்னமனூர் மேற்கு ஒன்றியம், கே.செந்தில்முருகன் மாவட்ட துணை செயலாளர் - பெரியகுளம் வடக்கு ஒன்றியம், எம். திருக்கண்ணன் மாவட்ட துணை செயலாளர் - தேனி தெற்கு ஒன்றியம், திருமதி.நாகஜோதி அருணாசலம் மாவட்ட துணை செயலாளர்- தாமரைக்குளம் பேரூர், எஸ். சுரேஷ் மாவட்ட பொருளாளர்- பூதிப்புரம் பேரூர்,

M.சங்கர் தலைமை செயற்குழு உறுப்பினர்- தேனி நகரம், பி.முருகேசன்- போடிநாயக்கனூர் நகரம், பி.தெய்வேந்திரன தலைமை பொதுக்குழு உறுப்பினர் -வீரபாண்டி பேரூர், ஆர். ராஜ ரமேஷ தலைமைபொதுக்குழுஉறுப்பினர்- பெரியகுளம் தெற்கு ஒன்றியம்,எம் கன்னையன்- பெரியகுளம் நகரம், முனியம்மாள் முனியாண்டி தலைமை பொதுக்குழு உறுப்பினர் - தென்கரை பேரூர், ஆஜிப்கான் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்- பொ.ஆசைதம்பி மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்- தேனி வடக்கு ஒன்றியம், பரணிஸ்வரன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்- கெங்குவார்பட்டி பேரூர், ஜெயக்குமார் இளைஞர் அணி துணை அமைப்பாளர்- மார்கையன்கோட்டை பேரூர், தெய்வேந்திரன் -இளைஞர் அணி துணை அமைப்பாளர் - தேவதானப்பட்டி பேரூர்,

முத்துராம் ஜி இளைஞர் அணி துணை அமைப்பாளர்- பழனிசெட்டிபட்டி பேரூர், செல்லத்துரை இளைஞர் அணி துணைஅமைப்பாளர்- வடுகபட்டி பேரூர், S.செல்வக்குமார் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர்- மீனாட்சி புரம் பேரூர், முனியாண்டி -மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் -குச்சனூர் பேரூர், செல்வக்குமார் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் -போடிநாயக்கனூர் கிழக்கு ஒன்றியம், வி.ஆர். ராஜன் மாவட்ட அயலக அணி அமைப்பாளர்- போடிநாயக்கனூர் மேற்கு ஒன்றியம், எஸ்.பி.டி. ஸ்டீபன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர்- மேல சொக்கநாதபுரம் பேரூர்.

இவ்வாறு தங்கத் தமிழ்ச்செல்வன் எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவை முன்னிட்டு கோலியனூர் கிழக்கு ஒன்றியம் சுந்தரிபாளையம் கிளையில் ஒன்றிய இளைஞர் அணி இரா.இராஜசேகர் ஏற்பாட்டில் நடைபெற்ற விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கலந்து கொண்டு கழகக் கொடியேற்றி, இனிப்புகளை வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றியச் செயலாளர்கள் பி.தெய்வசிகாமணி, தே.முருகவேல், வி.ஜி.பிரபாகரன், ஒன்றியக் குழுத் தலைவர் சச்சிதானந்தம், பேரூர்ச் செயலாளர் பா.ஜீவா, நகரப் பொருளாளர் என்.என்.இளங்கோ, வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுவை.சுரேஷ், விவசாய அணி கேசவன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், ஒன்றிய நிர்வாகிகள் ஸ்ரீதர், குணா, இளைஞர் அணி முத்துக்குமார், பிரபாகரன், செந்தமிழ் செல்வன் ஊராட்சி மன்றத் தலைவர் இதில் பங்கேற்றனர். சிவகாமி ராஜசேகர் நன்றியுரையாற்றினார்.

---

### ஈரோடு வடக்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் - வேட்பு மனுத்தாக்கல்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், ஈரோடு வடக்கு மாவட்டம்" தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட வி.பி.சண்முகசுந்தரம் மறைவெய்திய காரணத்தால்;

ஈரோடு வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி. இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024 அக்டோபர் 3 (வியாழக் கிழமை) அன்று ரூ.25000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் ஈரோடு வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய / நகர / பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

தலைமைக் கழகத்தில், வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ. 1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.9.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

### தி.மு.க. 15 ஆவது பொதுத் தேர்தல்

# ஈரோடு வடக்கு மாவட்டம், ஒன்றியக் கழகப் பொருளாளர் மற்றும் மாவட்டப் பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் - வேட்புமனுத் தாக்கல்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், ஈரோடு வடக்கு மாவட்டம், சத்தியமங்கலம் வடக்கு ஒன்றியப் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட ச.பொன்மேன் நம்பியூர் ஒன்றியப் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.ஏ.பொன்னுச்சாமி மற்றும் பவானி வடக்கு ஒன்றியத்தின் மாவட்டப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.பி.பாலு ஆகியோர் மறைவெய்திய காரணத்தால்;

ஈரோடு வடக்கு மாவட்டம், சத்தியமங்கலம் வடக்கு ஒன்றியப் பொருளாளர் - நம்பியூர் ஒன்றிய பொருளாளர் மற்றும் பவானி வடக்கு ஒன்றியம் மாவட்டப் பிரதிநிதி ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024. அக்டோபர் 3 (வியாழக் கிழமை) அன்று ரூ.1000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

**தகுதி விவரம்**

ஒன்றியக் கழக நிர்வாகப் பொறுப்புக்குப் போட்டியிடுவோர் அவர்கள் வேட்புமனுக்களில் முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்த ஒன்றியத்திற்கு கிளைக் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைச் செயலாளராகவோ, பேரூர்ச் செயலாளராகவோ,ஒன்றியப் பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.9.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

### தி.மு.க. 15 ஆவது பொதுத் தேர்தல்

# ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகர அவைத் தலைவர் மற்றும் துணைச் செயலாளர் (பொது) ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் வேட்பு மனு தாக்கல்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகர அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜி.மணி துணைச் செயலாளராக (பொது) தேர்ந்தெடுக்கப்பட்ட பி.மெய்யழகன் ஆகியோர் மறைவெய்திய காரணத்தால்;

ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகர அவைத்தலைவர் மற்றும் துணைச் செயலாளர் (பொது) ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024. அக்டோபர் 3 (வியாழக் கிழமை) அன்று ரூ.1000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

**தகுதி விவரம்**

நகரக் கழக நிர்வாகப் பொறுப்புக்குப் போட்டியிடுவோர் அவர்கள் வேட்புமனுக்களில் முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்த நகரத்திற்குட்பட்ட வார்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு செயலாளராகவோ, பிரதிநிதியாகயோ இருத்தல் வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.9.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.